**செயற்பொறியாளர்,பொ.ப.து/நீ.ஆ.து., கனிமம் மற்றும் கண்காணிப்புக் கோட்டம், மதுரை அவர்களின் செயல்முறைகள்**

பிறப்பிப்பவர்:- பொறி .கே.பிரான், பி.இ.,
செயற்பொறியாளர், பொ.ப.து,நீஆது.,

செயல்முறை ஆணை எண்.இ2 / 30(953-1)/ 2021 /நாள்: .01.2021

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து - நேரடி நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப்பணித் தொகுதி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிக்களுக்கான தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு இக்கோட்ட கட்டுப்பாட்டின்கீழ் உள்ள உபகோட்டம், தூத்துக்குடி அலுவலகத்தில் பணிபுரியும் செல்வி.வெ.கெங்காதேவி, இளநிலை உதவியாளர் (பிறந்த தேதி 22.04.1996) - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை -3, அவர்களின் கடித எண்.2496//PSD-1/2020/ நாள்:29.05.2020.
2. முதன்மை தலைமை பொறியாளர் நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்.3 (3)/ 35935/ 2020/ நாள்17.09.2020.
3. செயற்பொறியாளர், பொ.ப.து/நீஆது, கனிமம் மற்றும் கண்காணிப்புக்கோட்டம், மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண்.இ2/30(953)/ 2020/நாள்:22.09.2020.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற போட்டி தேர்வு -2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான தொகுதி IV-ல் தேர்ச்சி பெற்று பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு முதன்மை தலைமைப்பொறியாளர் நீஆது, மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொ.ப.து, சேப்பாக்கம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக இக்கோட்ட கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் உதவி செயற்பொறியாளர், பொபது/நீஆது., கனிமம் மற்றும் கண்காணிப்பு உபகோட்டம், தூத்துக்குடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட செல்வி.வெ.கெங்காதேவி, இளநிலை உதவியாளர் (வரிசை எண் 17), (தேர்வாணைய வரிசை எண் 79) (பிறந்த தேதி 22.04.1996) 22.09.2020 முற்பகல் தூத்துக்குடி உபகோட்டத்தில் இளநிலை உதவியாளராக பணியேற்று தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

த.பி.பா

தனியர் மீது இதுநாள் வரை எவ்விதமான குற்றச்சாட்டுகளோ, ஒழுங்கு நடவடிக்கைகளோ மேற்கொள்ளப் படவில்லை என்றும், மேலும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 விதி எண்7(5)-ன்படி பார்வை எண்.2 இல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களின் கடிதத்தில் பத்தி எண் 4-இல் குறிப்பிட்டுள்ளவாறு இளநிலை உதவியாளர் பணி நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தொகுதி IV தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்பிற்கு உட்பட்டது என்ற நிபந்தனையின்படியும், தனியர் பணியேற்ற நாளான 22.09.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை படுத்தியும், தனியருக்குரிய தகுதிகாண் பருவம் இளநிலை உதவியாளர் பதவியில் 22.09.2020 முற்பகல் முதல் துவங்கிடவும் தனது இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டு தொடர்பணியில் இரண்டு ஆண்டு பணிக்காலத்தினை தகுதிகாண் பருவக்காலத்தில் வைத்திடவும், தகுதிகாண் பருவகாலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்திடவும், மாவட்ட அலுவலக நடைமுறை நூல் - (துறை தேர்வு) தேர்வில் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஆணை வழங்கப்படுகிறது.

22/01/21

செயற்பொறியாளர்,பொபது.,நீஆது.,
கனிமம் மற்றும் கண்காணிப்பு கோட்டம்,
மதுரை.

22.01.2021

பெறுநர்:
செல்வி.வெ.கெங்காதேவி,
இளநிலை உதவியாளர்.
கனிமம் மற்றும் கண்காணிப்பு உபகோட்டம்,
தூத்துக்குடி.
வழி: உதவி செயற்பொறியாளர், பொபது/நீஆது., கனிமம் மற்றும் கண்காணிப்பு உபகோட்டம்,
தூத்துக்குடி.